

மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் தி.மு.க. கழகத்தின் சார்பில்போட்டியிடும்வழக்கறிஞர் இ. பரந்தாமனைஆதரித்து விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. நிர்வாகிகள் விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளர் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் தலைமையில் அச்சிறுப்பாக்கம் வடக்கு ஒன்றியத்திற்கு உட்பட்ட அகிலி ஊராட்சியில் அச்சிறுப்பாக்கம் வடக்கு ஒன்றிய செயலாளர் தம்பு, ஒன்றிய கவுன்சிலர் சிலம்பரசன் ஆகியோர் முன்னிலையில் முன்னாள் எம்.எல்.ஏ. செந்தமிழ்செல்வன், செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், மேல்மலையனூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் நெடுஞ்செழியன், மைலம் வடக்கு ஒன்றிய செயலாளர் மணிமாறன் உள்ளிட்ட தி.மு.க. வாக்காளர்களிடத்தில் உதய சூரியன் சின்னத்துக்கு வாக்குகள் சேகரித்தனர்.



தாராபுரம் சட்டமன்றத் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் வெற்றி வேட்பாளர் சுகன்யா அவர்களை ஆதரித்து கொளத்துப்பாளையம் பேரூர் கணபதி பாளையம் கோல்டன் சிட்டி பகுதி வாக்காளப் பெருமக்களிடம் விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் ஜீ.வி.மார்க்கண்டேயன் வாக்குச் சேகரித்தார்.உடன் ஒன்றிய செயலாளர்கள் ராதாகிருஷ்ணன், நவநீதக்கண்ணன், ராமசுப்பு காசிவிஸ்வநாதன், அன்புராஜன், விளாத்திகுளம் பேரூர் கழக செயலாளர் வேலுச்சாமி, காங்கேயம் நகராட்சி மன்றத் தலைவர் சூரிய பிரகாஷ் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

### தகவல் அறியும் உரிமை மூலம் சட்டம் – ஒழுங்கு விவரங்களைப் பெறுவதற்கு விலக்கு அளிப்பதா?

# சத்துணவுத் திட்டத்தில் முட்டை வழங்குவது திட்டமிட்டுத் தவிர்க்கப்படுகிறதா?

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை

சென்னை, செப்.28-

திராவிடர் கழகத் தலைவர் கி. வீரமணி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்து, மாணவர்களைப் பள்ளியில் பெருமளவில் சேர்ப்பதற்காகவும், ஏழை - எளிய மாணவர்களுக்கு அடிப்படைத் தேவையான உணவு கிடைப்பதை உறுதிசெய்யவும், நீதிக்கட்சியின் தோற்றுநர்களில் ஒருவரான சர். பிட்டி. தியாகராயர் அவர்கள், சென்னை மாநகராட்சியின் தலைவராக இருந்த போது, 1920 ஆம் ஆண்டு செப்டம்பர் 16 அன்று நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில், ஆயிரம் விளக்குப் பகுதியில் இருந்த பள்ளியில் காலை உணவுத் திட்டத்தை அறிமுகப்படுத்தினார். இத்திட்டத்தில் பின்னர் மேலும் நான்கு பள்ளிகள் இணைக்கப்பட்டதைத் தொடர்ந்து, அந்த அய்ந்து பள்ளிகளிலும் மாணவர் சேர்க்கையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டது.

**பிரிட்டிஷ் அரசு அனுமதி மறுத்ததால்...**

1923 இல் 811 ஆக இருந்த மொத்த மாணவர் எண்ணிக்கை 1925 இல் 1,671 ஆக உயர்ந்தது. இருப்பினும், தொடக்கக் கல்வி நிதியிலிருந்து மாணவர்களுக்கு மதிய உணவு வழங்குவதற்கான செலவை மேற்கொள்ள பிரிட்டிஷ் அரசு அனுமதி மறுத்ததால், 1925 ஆம் ஆண்டு ஏப்ரல் ஒன்றாம் தேதியுடன் இத்திட்டம் முடிவுக்கு வந்தது.

**மதிய உணவுத் திட்டத்தை அறிமுகப்படுத்திய கல்வி வள்ளல் காமராஜர்!**

அதன் பின்னர், குலக்கல்வித் திட்டத்தைக் கொண்டு வந்த ராஜாஜியை ஒழித்து, தந்தை பெரியாரால் முதலமைச்சராக்கப்பட்டு, ராஜாஜி மூடிய 6,000 பள்ளிக் கூடங்களைத் திறந்தது மட்டுமல்லாமல், மேலும் 6,000 பள்ளிகளைத் திறந்த காரணத்தால், கல்வி வள்ளல் என்று போற்றப்பட்ட காமராஜர், 1957 ஆம் ஆண்டில், அப்போதைய சென்னை மாநிலம் முழுக்க, மதிய உணவுத் திட்டத்தை அறிமுகப்படுத்தினார். கல்வியாளரும், பெரியார் நெறியாளருமான நெ.து.சுந்தரவடிவேலு அவர்கள் கல்வித் துறைப் பொறுப்பாளராக இருந்து இதனைச் செயல்படுத்தினார். அதற்குப் பெரிதும் தனியாரின் உதவிகளையே அரசு நாடியிருந்தது.

பின்னர் 1982 இல், அப்போதைய முதலமைச்சர் எம். ஜி. ஆர். அரசின் நிதியிலேயே தொடக்கப் பள்ளி மாணவர்களுக்குச் சத்துணவுத் திட்டத்தை அறிவித்து, அதே ஆண்டு ஜூலை ஒன்றாம் தேதி, திருச்சி மாவட்டம் பாப்பாக்குறிச்சியில் உள்ள ஒரு பள்ளியில் தொடங்கி வைத்தார்.

**முட்டை, வாழைப்பழம் வழங்கினார் முத்தமிழறிஞர் கலைஞர்!**

‘சத்துணவு என்பது திட்டத்தின் பெயரில் மட்டும் இருந்தால் போதாது’ என்று கருதிய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், 1989 ஆம் ஆண்டில், சத்துணவில் இரு வாரங்களுக்கு ஒரு முறை முட்டை வழங்க வகை செய்தார். பின்னர் மீண்டும் ஆட்சிக்கு வந்த சூழலில், 1998 முதல் வாரத்திற்கு ஒருமுறை முட்டை வழங்க ஆணையிட்டார். அடுத்து ஆட்சிக்கு வந்த போது 2007 ஆம் ஆண்டில், வாரத்தில் மூன்று நாட்கள் முட்டை வழங்கப்பட்டது. அடுத்த ஆண்டு, வாரத்தின் அய்ந்து நாட்களும் முட்டை வழங்கவும், அதிலும் பேதம் பாராமல், முட்டை சாப்பிடும் பழக்கமில்லாத மாணவர்களுக்காக வாழைப்பழம் வழங்கவும் வகை செய்தார் கலைஞர். பின்னர் ஜெயலலிதா அம்மையார் ஆட்சிக் காலத்தில் கலவை சோறுகள் வழங்க வகை செய்யப்பட்டது. இவையெல்லாம் மதிய உணவுக்கான திட்டங்கள் (Mid-Day Meals).

**காலை உணவு வழங்கிய ‘திராவிட மாடல்’ முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்!**

ஆனால், பள்ளிக்கு வரும் இக் காலக் குழந்தைகள், பெரிதும் காலை உணவு அருந்தாமல் வருவதால், அவர்கள் சோர்வாகவே இருப்பதை அறிந்து, முதல் முறையாக ஒன்று முதல் அய்ந்தாம் வகுப்பு வரை பயிலும் அரசுப் பள்ளிக் குழந்தைகளுக்குக் காலை உணவு வழங்கும் திட்டத்தை அறிமுகப்படுத்தியவர் சமூகநீதிக்கான சரித்திர நாயகர் ‘திராவிட மாடல்’ முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களாவார்கள். அத் திட்டத்திற்குப் பெயர் சூட்டும் போதுகூட, பொதுவான அளவில் ‘முதலமைச்சர் காலை உணவுத் திட்டம்’ என்றே பெயர் சூட்டினார். பின்னர் அதனை அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கும் விரிவுபடுத்தியது தி.மு.க. அரசு.

தற்போது, ஆளும் த.வெ.க. அரசு எட்டாம் வகுப்பு வரை இதனை விரிவுபடுத்தியுள்ளது, வரவேற்கத்தக்கது. மேலும், இத் திட்டத்திற்குக் ‘காமராசர் காலை உணவுத் திட்டம்’ என்று பெயர் மாற்றியுள்ளது. காலை உணவுத் திட்டம் என்பதை முதன் முதலில் அறிமுகப்படுத்தியவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள்தான் என்பதைப் பெயர் மாற்றங்களால் மறைத்துவிட முடியாது. காலத்தால் அது நிலைத்து நிற்கும்.



முட்டை வழங்குவது திட்டமிட்டுத் தவிர்க்கப்படுகிறதா?

அதே நேரத்தில் திருச்சி, கரூர், நாமக்கல், ஈரோடு, சேலம், நெல்லை, நாகப்பட்டினம் உள்ளிட்ட பல மாவட்டங்களில் கடந்த வாரம் வெள்ளிக்கிழமை அன்று சத்துணவில் முட்டை வழங்கப்படவில்லை. அரசுப் பள்ளிகளில் கடந்த 15 ஆண்டுகளில் இப்படியொரு நிகழ்வு நடந்ததில்லை என்கிறார்கள் ஆசிரியப் பெருமக்கள். முட்டை வழங்கலில் தட்டுப்பாடா? இல்லை முட்டை வழங்குவது திட்டமிட்டுத் தவிர்க்கப்படுகிறதா?

ஏற்கெனவே ‘அக்ஷயப் பாத்ரா’ என்னும் திட்டத்தைச் செயல்படுத்துகிறோம் என்று சொல்லி, இஸ்கான் அமைப்பு பூண்டு, வெங்காயம் இல்லாத ‘சைவ’ உணவை வழங்குகிறோம் என்று நுழைந்தபோது, கடும் எதிர்ப்பை நாம் தெரிவித்தோம். பின்னர் அத் திட்டம் ரத்து செய்யப்பட்டது. அத்தகைய முயற்சிகள் பின்னணியில் இருக்கின்றனவா என்னும் சந்தேகம் பொதுவானவர்களுக்கு எழுந்துள்ளது.

**கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும்!**

தமிழ்நாடு அரசின் பள்ளிக் கல்வித் துறை உடனடியாக இது குறித்து விளக்கம் அளிக்க வேண்டும். இத்தகைய சூழல் ஒரு போதும் தொடரக் கூடாது. பள்ளிக் குழந்தைகளின் உணவு விவகாரத்தில் குழப்பமோ, சிக்கலோ, தடங்கலோ இருப்பதை அனுமதிக்க முடியாது. இதற்குக் காரணமானவர்கள் யார் என்பதை அரசு வெளிப்படுத்தி, உரிய கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும்!

தகவல் பெறும் உரிமைச் சட்டம்

தங்கள் நாட்டில் என்ன நடக்கிறது, அரசில் என்ன நடக்கிறது என்பதைக் குடிமக்கள் அறிந்துகொள்ளும் உரிமையை வழங்கியது 2005 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட தகவல் அறியும் உரிமைச் சட்டமாகும். காங்கிரஸ் தலைமையிலான அய்க்கிய முற்போக்குக் கூட்டணி அரசின் சாதனைகளுள் முக்கியமானது இது. பல்வேறு முக்கியமான தகவல்களைப் பொதுவெளிக்குக் கொண்டுவந்ததில் தகவல் அறியும் உரிமைச் சட்டத்திற்குப் பெரும் பங்கு உண்டு. ஆனால், அதன் வீரியத்தைக் குறைக்கும் வகையில் ஒன்றிய பா.ஜ.க. அரசு தொடர்ந்து, பல துறைகளை அதிலிருந்து விடுவித்துவிட்டது. கண்டனத்திற்குரியதாகும்!

தற்போது, தமிழ்நாடு அரசும் அத்தகைய வழிமுறையைப் பின்பற்றத் தொடங்கியிருப்பது கண்டனத்திற்குரியதாகும். தமிழ்நாடு அரசின் பொதுத்துறையின் கீழ் இயங்கும் பொது சட்டம் - ஒழுங்குத் துறைக்குத் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தில் (RTI) இருந்து முழு விலக்கு அளித்து பிறப்பிக்கப்பட்டுள்ள அரசாணை இன்று (27.9.2026) அரசிதழில் வெளியாகியுள்ளது அதிர்ச்சிக்குரியது. “தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005 இன் பிரிவு 24 (4)-இல் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைச் செயல்படுத்தி, தமிழ்நாடு ஆளுநர், தமிழ்நாடு அரசால் நிறுவப்பட்ட உளவு மற்றும் பாதுகாப்பு அமைப்பான பொதுத் துறை (சட்டம் மற்றும் ஒழுங்கு) பிரிவை, மேற்படி சட்டத்திற்கு பொருந்தாத அமைப்பாக இதன் மூலம் அறிவிக்கிறார்” என்று அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**தகவல் அறியும் உரிமையை தமிழ்நாடு அரசாணை மறுக்கிறது!**

வெளிப்படையான நிர்வாகம் (Transparent Government) வழங்குவோம் என்று பிரச்சாரம் செய்த த.வெ.க., ஆட்சிக்கு வந்த பின், மிக முக்கியமான சட்டம் மற்றும் ஒழுங்குத் துறைக்கே திரையிட்டு மறைக்க முயற்சிப்பது ஏன்? நாட்டின் சட்டம் - ஒழுங்கு பெரும் கீழிறக்கத்துக்குச் சென்று கொண்டிருக்கும் நிலையில், அதனைச் சரி செய்து நிர்வாகத்தைச் சீர்செய்வதை விடுத்து, அத் தகவல்கள் வெளியில் தெரிந்துவிடக் கூடாது என்பதில் கவனம் செலுத்துவது சரியானதல்ல. மனித உரிமை ஆணையத்தின் குறிப்புகள், துப்பாக்கிச் சூடு குறித்த ஆணைய அறிக்கைகள், காவல் மரணங்கள் உள்ளிட்ட பல முக்கியமான பிரச்சினைகள் குறித்து, தகவல் அறியும் உரிமையை இந்த அரசாணை மறுக்கிறது. சட்டம் ஒழுங்குச் சீர்கேட்டை ஒழிப்பதற்குத் தான் அரசு வேண்டுமே தவிர, ஒளித்து வைப்பதற்கு அல்ல. உடனடியாக இந்த அரசாணை திரும்பப் பெறப்பட வேண்டும். இந்த உரிமைகள் பறிக்கப்படக் கூடாது.

அனைத்துக் கட்சிகளின் கடும் எதிர்ப்பைத் தொடர்ந்து, தகவல் அறியும் உரிமைச் சட்டத்தில் (RTI) இருந்து சட்டம் - ஒழுங்குப் பிரச்சினைக்கு முழு விலக்கு அளித்து பிறப்பிக்கப்பட்டுள்ள அரசாணையை தமிழ்நாடு த.வெ.க. அரசு 6 மணிநேரத்தில் திரும்பப் பெற்றுள்ளதாகச் செய்தி வந்துள்ளது.

முக்கியமான பிரச்சினைகளில் இப்படி ஆழம் பார்ப்பதும், யாரும் எதிர்க்கவில்லை என்றால் அப்படியே தொடர்வதும் ஓர் அரசுக்கு அழகல்ல. ஆட்சி அமைந்தது முதலே இப்படி பல அறிவிப்புகளும், அரசாணைகளும் வெளிவந்து, பின்னர் திரும்பப் பெறப்படுவது தொடர்கிறது. இது யாரால் ஆட்சி நடத்தப்படுகிறது என்னும் கேள்வியை மக்கள் மத்தியில் எழுப்பியுள்ளது. இதன் பின்னணியில் இருப்பவர்கள் யார்?

வெளிப்படை நிர்வாகம் என்பதும், மக்களுக்கான அரசு வெறும் வார்த்தை ஜாலமாக இருக்கக் கூடாது!

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கையில் கண்டனம் தெரிவித்துள்ளார்.

### மதுராந்தகம் தொகுதி இ.பரந்தாமனை ஆதரித்து

# விழுப்புரம் வடக்கு மாவட்டக் கழகத்தினர் வாக்குச் சேகரிப்பு!

## மாவட்டச் செயலாளர் செஞ்சி மஸ்தான் தலைமை!

அச்சிறுப்பாக்கம், செப் 28-

மதுராந்தகம் சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தலில் திமுக கழகத்தின் சார்பில் கழகத்தின் வெற்றி வேட்பாளர் வழக்கறிஞர் பரந்தாமன் உதய சூரியன் சின்னத்தில் போட்டியிடுகிறார்.

இவரை ஆதரித்து விழுப்புரம் வடக்கு மாவட்ட திமுக நிர்வாகிகள் விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளர் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் தலைமையில் அச்சிறுப்பாக்கம் வடக்கு ஒன்றியத்திற்கு உட்பட்ட அகிலி, மாத்தூர், ஊனமலை, சிறு நாகலூர் ஆகிய ஊராட்சிகளில் உதய சூரியன் சின்னத்திற்கு தீவிர வாக்கு சேகரித்து வருகின்றனர்.

அப்போது அகிலி ஊராட்சியில் விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளர் முன்னாள் அமைச்சர், செஞ்சி மஸ்தான்தலைமையில், அச்சிறுப்பாக்கம் வடக்கு ஒன்றிய செயலாளர் தம்பு, ஒன்றிய கவுன்சிலர் சிலம்பரசன் ஆகியோர் முன்னிலையில் முன்னால் எம்.எல்.ஏ. செந்தமிழ்செல்வன், செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், மேல்மலையனூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் நெடுஞ்செழியன், மைலம் வடக்கு ஒன்றிய செயலாளர் மணிமாறன்உள்ளிட்ட திமுகவினர்

அகிலி ஊராட்சியில் ஒவ்வொரு வீடாக சென்று தின்னை பிரச்சாரம் மேற்கொண்டு திமுக ஆட்சியில் செய்த பல்வேறு திட்டங்களை வாக்காளர்களிடத்தில் கூறி இத்திட்டங்களை மீண்டும் செயல்படுத்தற்கு உதய சூரியன் சின்னத்திற்கு தீவிர வாக்கு கேட்டுதிமுக வேட்பாளர் பரந்தாமனை அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற செய்ய வேண்டும் என வலியுறுத்தி துண்டு பிரசுரத்தை வழங்கினர்

இதில் அகிலி ஊராட்சி நிர்வாகிகள் விஜயன், மார்ட்டின், விக்டர், வரதராஜன்,செஞ்சி ஒன்றிய அவை தலைவர் வாசு, மாவட்ட பிரதிநிதி அய்யாதுரை, ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் ஜம்போதி பழனி,மேல்மலையனூர் மத்திய ஒன்றிய பொருளாளர்கோபாலகிருஷ்ணன், எஸ்.பி. சம்பத் உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### தட்டாஞ்சாவடி தொகுதியில்

# தி.மு.க. வேட்பாளர் சேது செல்வத்தை ஆதரித்து வாக்குச்சேகரிப்பு!

## தி.மு.க. - எம்.எல்.ஏ.க்கள் வீடு, வீடாக சென்று தீவிர பிரச்சாரம்!

புதுச்சேரி, செப். 28-

தட்டாஞ்சாவடி தொகுதி தி.மு.க. வேட்பாளர் சேது என்கிற சேதுசெல்வம் அவர்களை ஆதரித்து புதுச்சேரி மாநில தேர்தல் பொறுப்பாளர் எஸ். ஜெகத்ரட்சகன் எம்.பி., மாநில அமைப்பாளர் இரா. சிவா, விழுப்புரம் மத்திய மாவட்டச் செயலாளர் மருத்துவர் இரா. இலட்சுமணன் எம்.எல்.ஏ., காலாப்பட்டு சட்டமன்ற உறுப்பினர் அ. செந்தில் (எ) ரமேஷ், வானூர் சட்டமன்ற உறுப்பினர் கௌதம் திராவிடமணி புதுச்சேரி மாநில கழக நிர்வாகிகள் மற்றும் கூட்டணி



கட்சி தலைவர்கள், நிர்வாகிகள் இணைந்து தட்டாஞ்சாவடி தொகுதிக்கு உட்பட்ட கெங்கையம்மன் கோவில் வீதி, மாரியம்மன் கோவில் வீதி, அய்யனார் கோவில் வீதி பகுதிகளில் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டனர்.

கெங்கையம்மன் கோவில் வீதி, மாரியம்மன் கோவில் வீதி பகுதிகளில் வாடகை வீட்டில் வசிக்கும் மக்களுக்கு இலவச வீட்டு மனைப் பட்டா அல்லது அடுக்குமாடி குடியிருப்பு இந்த அரசை வலியுறுத்தி பெற்றுத்தருவார். 50 வருடங்களுக்கும் மேலாக கோவில் மானிய நிலங்களில் வீடு கட்டி குடி யிருப்பவர்களுக்கு தீர்வு காணவும், சுகாதாரமற்ற குடிநீர் பருகுவதால் இப்பகுதியில் உள்ள குழந்தைகள், பெரியவர்களுக்கு ஏற்படும் உடல் பாதிப்புகளில் இருந்து விடுவிக்க குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்து சுகாதாரமான குடிநீர் வழங்க நடவடிக்கை எடுப்பார். தடையற்ற மின்சாரம், விடுபட்ட பகுதிகளில் பாதாள சாக்கடை இணைப்பு, இளைஞர்களின் தேவைக்காக விளையாட்டு மைதானம் என இப்பகுதி மக்களின் அடிப்படை வசதிகளை மேம்படுத்த பாடுபடும் தி.மு.க. வேட்பாளருக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்களியுங்கள் என்று வாக்களர்களிடம் துண்டு பிரசுரம் வழங்கி வாக்கு சேகரித்தனர்.

வாக்கு சேகரிப்பின் போது, மாவட்ட பொறுப்புக்குழு உறுப்பினர் வழக்கறிஞர் கண்ணப்பன், கண்டமங்கலம் சேர்மன் வாசு, பொதுக்குழு உறுப்பினர் தங்கவேலு, இந்திரா நகர் தொகுதி செயலாளர் ராதாகிருஷ்ணன், தொகுதி நிர்வாகிகள் ஏழுமலை, அருண்குமார் உள்ளிட்ட பலரும் உடனிருந்து வாக்கு சேகரித்தனர்.



தாராபுரம் சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தலில் போட்டியிடும் கழக வேட்பாளர் திருமதி.சுகன்யா அவர்களை ஆதரித்து தூத்துக்குடி வடக்கு மாவட்ட கழக செயலாளர் முன்னாள் அமைச்சர் பி.கீதாஜீவன் கொளத்துப்பாளையம் பகுதியில் வீடுவீடாக சென்று பிரச்சாரம் செய்து வாக்கு சேகரித்தார். உடன் மாவட்ட அணி அமைப்பாளர் அருண்குமார், பகுதி செயலாளர் ஜெயக்குமார், வட்ட செயலாளர் கங்கா ராஜேஷ் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



தென்காசி சட்டமன்றத் தொகுதி ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியம் வாடியூரைச் சேர்ந்த கழக மாநில பேச்சாளர் மரியராஜ் அவர்கள் சர்க்கரை நோயால் பாதிக்கப்பட்டு அவரது இடது கால் அகற்றப்பட்டது. மருத்துவ சிகிச்சை முடிந்து வீட்டில் இருந்து வரும் அவரை தென்காசி தெற்கு மாவட்ட முன்னாள் செயலாளர் பொ.சிவபத்மநாதன் நேரில் சந்தித்து மருத்துவ உதவித் தொகை வழங்கினார்.நிகழ்வில் ஒன்றிய குழு உறுப்பினர் அந்தோணிசாமி, மாவட்ட பிரதிநிதிகள் அன்பழகன்,ஸ்டீபன் சத்யராஜ்,ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் அசோக்,கிளை செயலாளர் பிலிப்ஸ்,சிவசக்தி ஆகியோர் கலந்து கொண்டனர். கழக ஆட்சியின் போது கழகத் தலைவர் அவர்கள் மாற்றுத்திறனாளி ஒருவரை ஒன்றிய கவுன்சிலராக நியமிக்க வேண்டும் என்ற உத்தரவு பிறப்பித்தார்கள்.அதன்படி ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியத்தில் வாடியூர் மரியராஜ் ஒன்றிய கவுன்சிலராக பணிபுரிந்து வருகிறார்.